**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, NAGERCOIL.**
**Case Number: CC.831/2023**
**PW:1**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சந்திரன் | LW | : 1 |
| Father's / Husband Name | : திரு.ரகுபதி | Occupation | : துணிக்கடையில் வேலை |
| Village | : கோட்டார் | | |
| Taluk | : | Age | : 61 |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 r/w RULE 35 OF CRIMINAL RULES OF PRACTICE 2019 THE DAY OF 08.10.2025**

**(எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**-

1. நான் தற்போது கோட்டாரில் வசித்து வருகிறேன். நான் நல்ல பெருமாள் துணிக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். 13.06.2023 ம் தேதி இரவு 10.00 மணியளவில் பட்டாரியார் வடக்கு தெருவில் உள்ள ரேசன் கடை திண்ணையில் எனது மகன் வெங்கடேஷ் அவருடைய நண்பர் ஆகாஷ் என்பவரும் அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி அகமது என் மகனிடம் ரூபாய் 2000/- கேட்டார். என் மகன் பணம் இல்லை என்று கூறியவுடன் எதிரி கெட்டவார்த்தையால் பேசி எனது மகனை அங்கிருந்த கல் மற்றும் டியூப்லைட்டால் எனது மகனையும் அவரது நண்பர் ஆகாஷ் என்பவரையும் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்பு எனது மகன் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்தவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். சிகிச்சையில் இருக்கும் போது எனது மகன் போன் மூலமாக தகவல் தெரிவித்து நான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த மகனிடம் சம்பவம் சம்மந்தமான விபரத்தை கேட்டு அவன் சொல்ல சொல்ல புகார் மனு எழுதி நான் கோட்டார் காவல் நிலையத்தில் கொடுத்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**-

1. எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில்லை.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.2
நாகர்கோவில்

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, NAGERCOIL.**
**Case Number: CC.831/2023**
**PW: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வெங்கடேஷ் | LW | : 2 |
| Father's / Husband Name | : திரு. சந்திரன் | Occupation | : சவுண்ட் சர்வீஸ் |
| Village | : கோட்டார் | | |
| Taluk | : | Age | : 27 |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 r/w RULE 35 OF CRIMINAL RULES OF PRACTICE 2019 THE DAY OF 08.10.2025**

**(எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**-

1. நான் தற்போது கோட்டாரில் வசித்து வருகிறேன். நான் சவுண்ட் சர்வீஸ் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. எதிரியை எனக்கு தெரியும். என் வீட்டின் அருகில் தான் உள்ளார். 13.06.2023 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நானும் எனது நண்பர் ஆகாஷ் என்பவருடன் ரேசன் கடையில் வைத்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி அகமது என்னிடம் ரூபாய் 2000/- பணம் கேட்டார். நான் பணம் இல்லை என்று கூறினேன். எனது மேல் பாக்கெட்டில் இருந்த ரூபாய் 2800/-ஐ எடுத்துக்கொண்டார். நான் அந்த ரூபாயை திருப்பி கேட்டதற்கு என்னை புண்டாமவனே, தேவிடியாபயலே என்று சொல்லி கெட்டவார்த்தை பேசி என்னை டியூப்லைட் பிரேம்மால் எனது வலது மற்றும் இடது முழங்கைக்கு கீழ் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார். பின்பு எனது நண்பரையும் அடித்தார். பின்பு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் டியூப்லைட்ட பொறுத்தக்கூடிய இரண்டு பிரேம்களை வைத்து தான் எதிரி என்னை அடித்தார். **அவை அ.சா.பொ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**-

1. எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில்லை.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.2

நாகர்கோவில்